கிருஷ்ண ஜெயந்தி: ஆளுநர், தலைவர்கள் வாழ்த்து

சென்னை, ஆக.25: கிருஷ்ண ஜெயந்தியையொட்டி, ஆளுநர் ஆர்.என். ரவி மற்றும் அரசியல் கட்சிகளின் தலைவர்கள் வாழ்த்து தெரிவித்துள்ளனர்.

ஆளுநர் ஆர்.என்.ரவி: விசேஷமான ஜென்மாஷ்டமியில், ஒவ்வொரு பாரதியருக்கும் அன்பான நல்வாழ்த்துகள். இந்த மகிழ்ச்சியான திருவிழா, பகவான் ஸ்ரீ கிருஷ்ணரின் தெய்வீக மகத்துவத்தையும், ஸ்ரீமத் பகவத் கீதையின் காலத்தால் அழியாத ஞானத்தையும் தழுவுவதற்கு நம்மைத் தூண்டுகிறது. கர்ம கோட்பாட்டின்படி நடக்கவும் தேச வளர்ச்சிக்காக ஒன்றிணைந்து செயல்படவும் அனைத்து மனிதகுலத்தின் நலன் மற்றும் நல்லிணக்கத்தை முன்னேற்றவும் நமக்குள் உறுதி கொள்வோம்.

எடப்பாடி பழனிசாமி (அதிமுக): உலகம் போற்றும் ஒப்பற்ற ஞான நூலாம் பகவத் கீதையை அருளிய பகவான் ஸ்ரீகிருஷ்ணர் அவதரித்த திருநாளை கிருஷ்ண ஜெயந்தி என்றும், கோகுலாஷ்டமி என்றும் கொண்டாடி மகிழும் மக்கள் அனைவருக்கும் வாழ்த்துகள். இந்த நாளில் ஒவ்வொருவரும் அறத்தைப் போற்றி, தீமைகளை முறியடிக்க உறுதியேற்க வேண்டும்.

ஓ.பன்னீர்செல்வம் (முன்னாள் முதல்வர்): கிருஷ்ண ஜெயந்தியை கொண்டாடும் அனைவருக்கும் வாழ்த்துகள். இந்நாளில் நாடெங்கும் அமைதி, வளம், வளர்ச்சி பெருக வேண்டும். தீயவற்றை அழிக்க அனைவரிடமும் ஒற்றுமை ஓங்க வேண்டும்.

டிடிவி தினகரன் (அமமுக): உலகில் தீமைகள் ஒழிந்து, அறம் தழைத்தோங்கிட, கிருஷ்ணர் அவதரித்த திருநாளைக் கொண்டாடி மகிழும் அனைவருக்கும் கிருஷ்ண ஜெயந்தி வாழ்த்துகள்.

அண்ணா பல்கலை. தேர்வுக் கட்டண உயர்வு நிறுத்திவைப்பு

சென்னை, ஆக.25: அண்ணா பல்கலைக்கழக செமஸ்டர் தேர்வுக் கட்டண உயர்வு நிறுத்திவைக்கப்பட்டுள்ளதாக உயர்கல்வித் துறை அமைச்சர் க.பொன்முடி தெரிவித்தார்.

அண்ணா பல்கலைக்கழகம் மற்றும் அதனுடன் இணைக்கப்பட்டுள்ள பொறியியல் கல்லூரிகளில் பயிலும் மாணவர்களின் தேர்வுக் கட்டணத்தை 50 சதவீதம் வரை உயர்த்தி அண்ணா பல்கலைக்கழகம் சார்பில் அறிவிக்கப்பட்டது.

இது குறித்து அமைச்சர் க.பொன்முடி சென்னையில் செய்தியாளர்களிடம் கூறியதாவது: 2023-ஆம் ஆண்டு அண்ணா பல்கலைக்கழக சிண்டிகேட் குழுவில் செமஸ்டர் தேர்வுக் கட்டணங்கள் உயர்த்தப்படுவதாக அறிவிப்பு வெளியிடப்பட்டது.

மாணவர்கள் நலன் கருதி கடந்த ஆண்டு பல்கலைக்கழக செமஸ்டர் தேர்வுக் கட்டணங்கள் உயர்த்தப்படாது எனவும், பழைய கட்டண முறையே பின்பற்றப்படும் எனவும் அறிவிக்கப்பட்டிருந்தது.

நடப்புக் கல்வி ஆண்டு தொடக்கத்தின் போது ஆட்சிமன்றக் குழுவின் கூட்டத்தில் முடிவெடுக்கப்பட்ட சமச்சீர் கட்டண உயர்வு மீண்டும் அமலுக்கு வருவதாக அறிவிப்பு வெளியாகி இருந்தது. ஆனால், மாணவர்களிடமிருந்து பெறப்பட்ட கோரிக்கைகளின் அடிப்படையில், அடுத்த சிண்டிகேட்டில் தீர்மானம் நிறைவேற்றும் வரை அண்ணா பல்கலைக்கழகத்தில் உயர்த்தப்பட்ட தேர்வுக் கட்டணம் நிறுத்திவைக்கப்படுகிறது. தேர்வுக் கட்டணத்தில் இப்போதுள்ள நடைமுறையே தொடரும். நிகழாண்டு மட்டுமல்ல, அடுத்த ஆண்டும் தேர்வுக் கட்டண உயர்வு நிறுத்திவைக்கப்படுகிறது. தேர்வுக் கட்டணத்தை உயர்த்துவது மாணவர்களைப் பாதிக்கும் என்பதைக் கருத்தில் கொண்டு தற்போது நிறுத்திவைக்கப்பட்டுள்ளது.

தன்னாட்சி பெற்ற கல்லூரிகளிலும், செமஸ்டர் தேர்வுக் கட்டணம் எவ்வளவு வசூலிக்கப்பட வேண்டும் என்பதை வரையறை செய்து அண்ணா பல்கலைக்கழகம் சார்பில் சுற்றறிக்கை வழங்கப்படவுள்ளது. அண்ணா பல்கலைக்கழகம் நிர்ணயித்துள்ள தேர்வுக் கட்டணத்தைத்தான் தன்னாட்சிக் கல்லூரிகளும் பெற வேண்டும்.

அண்ணா பல்கலைக்கழகத்தின் அங்கீகாரம் பெறுவதற்காக போலி பேராசிரியர்களைப் பயன்படுத்திய கல்லூரிகளின் மீது கட்டாயம் நடவடிக்கை எடுக்கப்படும் என்றார் அவர்.

7.5% இடஒதுக்கீட்டில் மருத்துவப் படிப்பில் சேரும் மாணவர்களுக்கு இபிஎஸ் வாழ்த்து

சென்னை, ஆக.25: நடப்பாண்டில் 7.5 சதவீத உள் இடஒதுக்கீட்டில் மருத்துவப் படிப்பில் சேரும் அரசு பள்ளியில் பயின்ற மாணவர்களுக்கு அதிமுக பொதுச்செயலர் எடப்பாடி பழனிசாமி வாழ்த்து தெரிவித்துள்ளார்.

அவர் 'எக்ஸ்' தளத்தில் ஞாயிற்றுக்கிழமை வெளியிட்ட பதிவு: 7.5 சதவீத மருத்துவ உள் இடஒதுக்கீட்டால் 2020-இல் 435 பேர், 2021-இல் 555 பேர், 2022-இல் 584 பேர், 2023-இல் 625 பேர் என ஒவ்வோர் ஆண்டும் மருத்துவக் கனவு நனவான அரசுப் பள்ளி மாணவ மாணவியரின் இன்முகங்களைக் காண்பதில் எப்போதும் எனக்குப் பெருமகிழ்ச்சி.

அதே போல, இந்த ஆண்டும் 7.5 சதவீத இடஒதுக்கீட்டில் மருத்துவப் படிப்பில் சேரும் மாணவர்கள் என்னை நேரில் சந்தித்து வாழ்த்து பெற்றதும், 7.5 சதவீத உள் இடஒதுக்கீட்டின் மகத்துவத்தைப் பறைசாற்றும் பேட்டிகளையும் கண்டு களிப்புற்றேன்.

அதிமுக அரசால் கொண்டுவரப்பட்ட 7.5 சதவீத இட ஒதுக்கீட்டின் மூலம் மருத்துவக் கனவு நனவாகியுள்ள அரசுப்பள்ளி மாணவர்கள் அனைவருக்கும் உளமார்ந்த வாழ்த்துகள். உங்களைப் போன்ற பல மருத்துவர்களை உருவாக்கும் நல்வாய்ப்பு கிடைத்ததற்கு அதிமுக பெருமை கொள்கிறது. ஏழை மாணவர்களுக்காக இன்னும் பல நலத்திட்டங்கள் தர அயராது பொதுத்தளத்தில் உழைப்பதற்கான உத்வேகத்தை உங்களுடைய சாதனைகள் எனக்குத் தருகின்றன. அனைவரும் உலகின் தலைசிறந்த மருத்துவர்களாக கோலோச்சி, தமிழக மக்களுக்கு மகத்தான மருத்துவ சேவையை அளிக்க வாழ்த்துகிறேன் என எடப்பாடி பழனிசாமி தெரிவித்துள்ளார்.

போக்குவரத்து ஒய்வூதியர்கள் நாளை மறியல் போராட்டம்

சென்னை, ஆக.25: போக்குவரத்து ஓய்வூதியர்கள் சார்பில் தமிழகத்தில் 9 இடங்களில் செவ்வாய்க்கிழமை (ஆக.27) மறியல் போராட்டம் நடைபெறும் என அறிவிக்கப்பட்டுள்ளது.

தமிழ்நாடு அரசு போக்குவரத்துக் கழக ஓய்வு பெற்றோர் நல அமைப்பின் பொதுச் செயலர் கே.கர்சன் ஞாயிற்றுக்கிழமை கூறியதாவது:

போக்குவரத்துக் கழக ஓய்வூதியர்களின் பிரச்னை நீண்ட காலமாக நிலுவையில் உள்ளது. ஓய்வூதியர்களுக்கு 106 மாதங்களாக அகவிலைப்படி உயர்வு வழங்கப்படவில்லை. இதை வழங்க உயர்நீதிமன்றம் உத்தரவிட்ட பின்னரும், மேல்முறையீடு செய்து அரசு காலம் தாழ்த்துகிறது.

2022-ஆம் ஆண்டு டிசம்பர் முதல் ஓய்வு பெற்றவர்களுக்கு பணப்பலன் மற்றும் மருத்துவக் காப்பீடு வழங்கப்படவில்லை. இதுபோன்ற பிரச்னைகளுக்கு விரைந்து தீர்வு காண வேண்டும் என்பன உள்ளிட்ட பல்வேறு கோரிக்கைகளை வலியுறுத்தி, செவ்வாய்க்கிழமை(ஆக.27) தமிழகம் முழுவதும் 9 இடங்களில் மறியல் போராட்டத்தை முன்னெடுக்கவுள்ளோம். இதன் ஒரு பகுதியாக சென்னை, பல்லவன் இல்லம் அருகே மறியல் போராட்டம் நடைபெறும் என்றார் அவர்.

திருவையாறு காவிரியாற்றில் மூழ்கி 2 மாணவர்கள் உயிரிழப்பு

தஞ்சாவூர், ஆக. 25: தஞ்சாவூர் மாவட்டம், திருவையாறில் காவிரியாற்றில் மூழ்கி பள்ளி மாணவர்கள் 2 பேர் ஞாயிற்றுக்கிழமை உயிரிழந்தனர்.

திருவையாறு மேலவட்டம் பகுதியைச் சேர்ந்த ராமலிங்கம் மகன் பிரவீன்குமார் (14). தனியார் பள்ளியில் 9-ஆம் வகுப்பு படித்து வந்தார். இதே பகுதி, ராஜா நகர் செந்தில்குமார் மகன் ஹரிபிரசாத் (15). கரந்தையிலுள்ள தனியார் பள்ளியில் 11-ஆம் வகுப்பு படித்து வந்தார். இவர்கள் இருவரும் ஞாயிற்றுக்கிழமை திருவையாறு 15-ஆவது மண்டபத் தெரு ஐயப்பன் கோயில் பின்புறம் உள்ள காவிரி ஆற்றுப் படித்துறையில் குளித்தபோது ஆற்றில் மூழ்கினர். தகவலின்பேரில், திருவையாறு தீயணைப்பு துறையினர் விரைந்து வந்து மீட்புப் பணியில் ஈடுபட்டு, காவிரியாற்றின் புஷ்ய மண்டப படித்துறை எதிரே ஆற்றின் நடுப்பகுதியில் இருவரையும் சடலமாக மீட்டனர். சம்பவம் தொடர்பாக திருவையாறு போலீஸார் வழக்குப் பதிந்து விசாரிக்கின்றனர்.

விஜயகாந்த் சிலையை திறந்து வைத்தார் பிரேமலதா

சென்னை, ஆக.25: விஜயகாந்த் பிறந்தநாளையொட்டி, சென்னை கோயம்பேட்டில் உள்ள தேமுதிக தலைமை அலுவலகத்தில் அவரது சிலையை அக் கட்சியின் பொதுச்செயலர் பிரேமலதா விஜயகாந்த் ஞாயிற்றுக்கிழமை திறந்துவைத்தார்.

விஜயகாந்தின் 72-ஆவது பிறந்த நாள் விழா தேமுதிக சார்பில் ஞாயிற்றுக்கிழமை கொண்டாடப்பட்டது. இதையொட்டி, தேமுதிக தலைமை அலுவலகத்தில் விஜயகாந்த் முழு உருவ வெண்கலச் சிலை மற்றும் மார்பளவு சிலையை பிரேமலதா திறந்து வைத்தார். விஜயகாந்த் நினைவிடத்தில் பிரேமலதா, மகன்கள் விஜய பிரபாகரன், சண்முகப் பாண்டியன், துணைப் பொதுச்செயலர் எல்.கே.சுதீஷ் உள்ளிட்டோர் மரியாதை செலுத்தினர். பின்னர் பிரேமலதா செய்தியாளர்களிடம் கூறியதாவது:

விஜயகாந்தின் 72- ஆவது பிறந்தநாளையொட்டி, சென்னை கோயம்பேட்டில் உள்ள தேமுதிக தலைமை அலுவலகத்தில் அவரது சிலையை ஞாயிற்றுக்கிழமை திறந்துவைத்து மலர் தூவி மரியாதை செலுத்திய கட்சியின் பொதுச்செயலர் பிரேமலதா. உடன் மகன்கள் சண்முக பாண்டியன், விஜய பிரபாகரன், துணை பொதுச்செயலர் எல்.கே.சுதீஷ், முன்னாள் எம்.எல்.ஏ. பார்த்தசாரதி.

தேமுதிக அலுவலகம், கேப்டன் ஆலயம் என இனி அழைக்கப்படும். விஜயகாந்த் பிறந்த நாளை வறுமை ஒழிப்பு தினமாக ஆண்டுதோறும் கொண்டாடி வருகிறோம். அந்த வகையில் இந்த ஆண்டும் பலருக்கு நல உதவிகள் வழங்கி வருகிறோம் என்றார் அவர்.

நலஉதவிகள் அளிப்பு: விஜயகாந்த் நினைவிடத்தில் காலை முதல் இரவு வரை அன்னதானம் வழங்கப்பட்டது.

ராமாபுரத்தில் உள்ள எம்ஜிஆர் காது கேளாதோர் பள்ளிக்கு ரூ.50,000 உதவித் தொகையை பிரேமலதா வழங்கினார். தில்லி தமிழ்ச் சங்கத்துக்கு ரூ.1 லட்சம் வழங்கப்பட்டது. மலைவாழ் மக்களுக்கு தேவையான அரசு சான்றிதழ்களை வாகனம் இல்லாமல் நடந்து சென்று வாங்கி கொடுத்து வந்த அந்தியூரைச் சேர்ந்த அப்புசாமி என்பவருக்கு மோட்டார் சைக்கிள் வழங்கப்பட்டது. இதேபோல, தமிழகம் முழுவதும் தேமுதிகவினர் ஏழை மக்களுக்கு நல உதவிகள் அன்னதானம் வழங்கி விஜயகாந்த் பிறந்த நாளை கொண்டாடினர்.

தலைவர்கள் புகழாரம்: அதிமுக பொதுச்செயலர் எடப்பாடி பழனிசாமி, மக்கள் நீதி மய்யம் தலைவர் கமல்ஹாசன் உள்பட பல்வேறு கட்சிகளின் தலைவர்கள், 'இயன்றதைச் செய்வோம், இல்லாதவர்க்கே என்ற கோட்பாட்டின்படி வாழ்ந்த மனிதநேயப் பண்பாளர் என விஜயகாந்துக்கு புகழாரம் சூட்டி செய்தி வெளியிட்டுள்ளனர்.

பட்டாசு ஆலையில் வெடி விபத்து: 2 பேர் உயிரிழப்பு

நத்தம், ஆக. 25: திண்டுக்கல் மாவட்டம், நத்தம் அருகே சனிக்கிழமை இரவு பட்டாசு ஆலையில் ஏற்பட்ட வெடி விபத்தில் 2 பேர் உயிரிழந்தனர்.

திண்டுக்கல் மாவட்டம், நத்தம் அருகேயுள்ள ஆவிச்சிபட்டியைச் சேர்ந்தவர் செல்வம் (48). முன்னாள் ஊராட்சி மன்றத் தலைவர். இவருக்குச் சொந்தமான மாந்தோப்பில் சட்டவிரோதமாக இயங்கி வந்த சிறிய ரக பட்டாசு ஆலையில், விருதுநகர் மாவட்டம், திருத்தங்கலைச் சேர்ந்த கண்ணன் என்ற சின்னன் (42), சிவகாசி விஸ்வநத்தம் பகுதியைச் சேர்ந்த முனீஸ்வரன் என்ற மாசா (30) ஆகியோர் பட்டாசுகள் தயாரிக்கும் பணியில் சனிக்கிழமை இரவு ஈடுபட்டிருந்தனர்.

அப்போது, ஏற்பட்ட வெடி விபத்தில் சிக்கி இருவரும் உடல் சிதறி உயிரிழந்தனர். இதுகுறித்து தகவலறிந்த நத்தம் போலீஸார் ஞாயிற்றுக்கிழமை அதிகாலை சம்பவ இடத்துக்குச் சென்று அவர்களது உடலைக் கைப்பற்றி, திண்டுக்கல் அரசு மருத்துவமனைக்கு கூறாய்வுக்காக அனுப்பி வைத்தனர். வெடி விபத்து நிகழ்ந்த பட்டாசு ஆலையில் வட்டாட்சியர் சரவணன், காவல் துணைக் கண்காணிப்பாளர் முருகேசன் ஆகியோர் ஆய்வு செய்தனர்.

இதுகுறித்து நத்தம் போலீஸார் வழக்குப் பதிந்து, தலைமறைவாக உள்ள பட்டாசு ஆலை உரிமையாளரான செல்வத்தை தேடி வருகின்றனர்.

அரசு நிவாரண நிதி: இந்த விபத்தில் இருவர் உயிரிழந்ததற்கு முதல்வர் மு.க.ஸ்டாலின் இரங்கல் தெரிவித்துள்ளதுடன், அவர்களின் குடும்பத்தினருக்கு தலா ரூ.3 லட்சம் முதல்வரின் பொது நிவாரண நிதியிலிருந்து வழங்க ஞாயிற்றுக்கிழமை உத்தரவிட்டார்.

கல்லூரி மாணவர்கள் அறைகளில் ஆயுதங்களுடன் தங்கியிருந்த 14 பேர் கைது

கோவையில் போலீஸ் நடவடிக்கை

மதுக்கரை/ சூலூர், ஆக. 25: கோவையில் செட்டிபாளையம், சூலூர் பகுதிகளில் கல்லூரி மாணவர்கள் தங்கியிருக்கும் அறைகளில் தனிப்படை போலீஸார் ஞாயிற்றுக்கிழமை அதிரடி சோதனை நடத்தினர்.

இதில் கஞ்சா உள்ளிட்ட போதைப் பொருள்கள், ஆயுதங்கள் பறிமுதல் செய்யப்பட்டுள்ளன. இதுதொடர்பாக கல்லூரி மாணவர்கள் உள்பட 14 பேரை தனிப்படை போலீஸார் கைது செய்துள்ளனர்.

கோவை மாவட்டம், செட்டிபாளையம், சூலூர் சுற்றுவட்டாரப் பகுதிகளில் தனியார் கல்லூரிகளில் பயின்று வரும் மாணவர்கள் வெளியில் அறை எடுத்துத் தங்கியுள்ளனர். இதில் குற்றச் சம்பவங்களில் தொடர்புடைய சிலர் பதுங்கி இருப்பதாக போலீஸாருக்கு ரகசிய தகவல் கிடைத்தது. இதையடுத்து கோவை மாவட்ட காவல் கண்காணிப்பாளர் கார்த்திகேயன் உத்தரவின் பேரில் 5 தனிப்படைகள் அமைக்கப்பட்டு, சுமார் 250 போலீஸார் ஞாயிற்றுக்கிழமை காலை 5 மணி முதல் பல்வேறு பகுதிகளில் மாணவர்கள் தங்கியுள்ள அறைகளில் அதிரடி சோதனை மேற்கொண்டனர்.

இதில், செட்டிபாளையம் அம்பாள் நகர், பூங்கா நகர் உள்ளிட்ட பகுதிகளில் சோதனை மேற்கொண்டபோது, மாணவர்கள் தங்கி இருந்த அறைகளில் அரிவாள், கத்தி மற்றும் கஞ்சா உள்ளிட்ட போதைப் பொருள்கள் இருந்தது தெரியவந்தது. மேலும், பல்வேறு குற்றச் சம்பவங்களில் ஈடுபட்டு பதுங்கி இருந்த இளைஞர்களையும் போலீஸார் மடக்கிப் பிடித்தனர்.

இதில், இருசக்கர வாகனத் திருட்டில் ஈடுபட்ட ராமநாதபுரம் மாவட்டத்தை சேர்ந்த முனீஸ்வரன் என்பவரின் 18 வயது மகன், காரைக்குடியைச் சேர்ந்த அருணாசலம் மகன் மணிவாசகம் (21) ஆகிய இருவரை போலீஸார் மடக்கிப் பிடித்தனர்.

அதேபோல கஞ்சா பொட்டலங்களைப் பதுக்கி வைத்திருந்த சேலம் மாவட்டத்தைச் சேர்ந்த வேலு மகன் தயாளன் (23), குமார் மகன் சந்தோஷ் (21), தருமபுரி மாவட்டத்தைச் சேர்ந்த திருவேங்கடம் என்பவரின் 18 வயது மகன், கோவை, மதுக்கரையைச் சேர்ந்த அன்சாரி மகன் பினஸ் (28), பாபு என்பவரின் 17 வயது மகன் ஆகிய 5 பேரை போலீஸார் கைது செய்து, அவர்களிடமிருந்து கஞ்சாவை பறிமுதல் செய்தனர். இதில் சந்தோஷ், திருவேங்கடத்தின் 18 வயது மகன் ஆகியோர் கல்லூரி மாணவர்களாவர்.

அதேபோல நகைப் பறிப்பில் ஈடுபட்ட கிருஷ்ணகிரியைச் சேர்ந்த சரவணன் மகன் ஆகாஷ் (21) என்பவரும் போலீஸாரிடம் சிக்கினார். பிடிபட்ட இளைஞர்கள் மறைத்து வைத்திருந்த நம்பர் பிளேட் இல்லாத இருசக்கர வாகனங்களைப் பறிமுதல் செய்த போலீஸார், பிடிபட்ட இரண்டு கல்லூரி மாணவர்கள் உள்பட 8 பேரை நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தி சிறையில் அடைத்தனர்.

சூலூரில்...: இதேபோல சூலூர், நீலாம்பூர், கோவில்பாளையம் உள்ளிட்ட பகுதிகளில் மாணவர்கள் தங்கியுள்ள அறைகளில் தனிப்படை போலீஸார் அதிரடி சோதனையில் ஈடுபட்டனர். இதில் மாணவர்களின் அறைகளில் இருந்து 6 வீச்சரிவாள்கள், 3 கிலோ கஞ்சா, போதை ஊசிகள் மற்றும் போதைப் பொருள்கள் பறிமுதல் செய்யப்பட்டன.

இதையடுத்து கல்லூரி மாணவர்களான நீலாம்பூர் அண்ணா நகரைச் சேர்ந்த இளங்கோ மகன் ரஞ்சித் (21), கோவில்பட்டியைச் சேர்ந்த முத்து மகன் ஹரிதரணி (20), ராமநாதபுரம் மாவட்டத்தைச் சேர்ந்த நாகேஸ்வரன் மகன் நவீன் குமார் (21), முன்னாள் கல்லூரி மாணவர்களான தேனி மாவட்டத்தைச் சேர்ந்த ஜெயக்குமார் மகன் பிரவீன் குமார் (21), பெரியகுளத்தைச் சேர்ந்த நந்தகுமார் மகன் தீபக் (21), சூலூரைச் சேர்ந்த பத்மநாபன் மகன் பிரகாஷ் (22) ஆகிய ஆறு பேரை சூலூர் போலீஸார் கைது செய்தனர்.

மேலும் 36 பேரிடம் சந்தேகத்தின் பேரில் போலீஸார் விசாரணை மேற்கொண்டு வருகின்றனர். இந்த அதிரடி சோதனையில் ஆவணங்கள் இன்றி இருந்த 42 வாகனங்களும் பறிமுதல் செய்யப்பட்டுள்ளன.

கொடிக்கம்பம் நட்டபோது மின்சாரம் பாய்ந்து தேமுதிக நிர்வாகி உயிரிழப்பு

சிதம்பரம், ஆக.25: கடலூர் மாவட்டம், பண்ருட்டி அருகே ஞாயிற்றுக்கிழமை தேமுதிக கொடிக்கம்பம் நட்டபோது மின்சாரம் பாய்ந்து அக்கட்சி நிர்வாகி உயிரிழந்தார். மேலும் 5 பேர் பலத்த காயமடைந்தனர்.

தேமுதிக தலைவர் விஜயகாந்த் பிறந்த நாளையொட்டி, பண்ருட்டி அருகே நடுக்குப்பம் கிராமத்தில் அக்கட்சியினர் ஞாயிற்றுக்கிழமை காலை கட்சிக் கொடிக்கம்பம் நடும் பணியில் ஈடுபட்டனர். கொடிக்கம்பத்தை நிமிர்த்தியபோது, எதிர்பாராத விதமாக மேலே சென்ற உயரழுத்த மின் கம்பியில் பட்டு மின்சாரம் பாய்ந்தது.

இதில், நடுக்குப்பத்தைச் சேர்ந்த தேமுதிக கிளைச் செயலர் ராமர் மகன் வெங்கடேசன் (40), ஜெகநாதன் மகன் செல்வகுமார் (41), கோவிந்தசாமி மகன் மதியழகன் (40), சொக்கலிங்கம் மகன் பிரகாஷ் (40), அருணாச்சலம் மகன் பழனிவேல் (42), கோதண்டபாணி மகன் செல்வம் (42) ஆகியோர் காயமடைந்தனர்.

இவர்களில் வெங்கடேசன் பண்ருட்டி அரசு மருத்துவமனைக்கு கொண்டு செல்லும் வழியிலேயே உயிரிழந்தார். முத்தாண்டிக்குப்பம் போலீஸார் வழக்குப் பதிந்து விசாரணை நடத்தி வருகின்றனர்.

பட்டாசு தயாரிக்க பதுக்கிய 500 கிலோ வெடி மருந்துகள் பறிமுதல்

சிதம்பரம், ஆக.25: கடலூர் அருகே அனுமதியின்றி பட்டாசு தயாரிக்கும் பணி நடைபெற்ற இடத்தில், பதுக்கி வைத்திருந்த 500 கிலோ வெடி மருந்துகளை போலீஸார் ஞாயிற்றுக்கிழமை பறிமுதல் செய்தனர். இதுதொடர்பாக, தலைமறைவாகிவிட்ட சகோதரர்கள் இருவரை காவல் துறையினர் தேடி வருகின்றனர்.

கடலூர் அருகே உள்ள நொச்சிக்காடு பகுதியில் ராஜேஷ் மற்றும் அவரது சகோதரர் ரமேஷ் ஆகியோர் பட்டாசு விற்பனைக்கான உரிமம் பெற்றிருந்தனர். நிகழாண்டு இதுவரையில் அவர்கள் உரிமத்தை புதுப்பிக்கவில்லை.

இந்த நிலையில், இருவரும் தொழிலாளர்களை வேலைக்கு அமர்த்தி, உரிய அனுமதியின்றி பட்டாசு தயாரிக்கும் பணியில் ஈடுபடுவதாக காவல் துறைக்கு தகவல் கிடைத்தது.

இதையடுத்து, கடலூர் முதுநகர் போலீஸார் நொச்சிக்காடு பகுதிக்குச் சென்று ராஜேஷுடைய இடத்தில் ஞாயிற்றுக்கிழமை ஆய்வு செய்தனர்.

அப்போது, அங்கு நவீன ரக பட்டாசுகள் தயாரிப்பதற்கான பணியில் தொழிலாளர்கள் ஈடுபட்டிருந்தனர். இதற்காக 500 கிலோ வெடி மருந்துகளை பதுக்கி வைத்திருந்ததும் தெரியவந்தது. அங்கு பணியில் ஈடுபட்டிருந்த தொழிலாளர்கள், போலீஸாரை கண்டதும் தப்பி ஓடி விட்டனர்.

தகவலறிந்து அங்கு வந்த வட்டாட்சியர் பலராமன், அந்த இடத்தைப் பார்வையிட்டு ஆய்வு செய்ததுடன், வெடி மருந்துகளைக் கைப்பற்றி அங்கிருந்த கிடங்குக்கு 'சீல்' வைக்க நடவடிக்கை உத்தரவிட்டார்.

இவ்வளவு வெடி மருந்துகள் எங்கிருந்து கொண்டு வரப்பட்டன என்பது குறித்து கடலூர் முதுநகர் போலீஸார் விசாரணை நடத்தி வருகின்றனர்.

மேலும், தலைமறைவாக உள்ள ராஜேஷ், ரமேஷ் ஆகியோரை போலீஸார் தேடி வருகின்றனர்.

எப்போதும் தனித்துப் போட்டி

அரியலூர், ஆக. 25: நாம் தமிழர் கட்சி எப்போதும் தனித்துப் போட்டியிடும் என்று அக்கட்சியின் தலைமை ஒருங்கிணைப்பாளர் சீமான் கூறினார்.

அரியலூரில் ஞாயிற்றுக்கிழமை நடைபெற்ற அரியலூர்-பெரம்பலூர் மாவட்ட நிர்வாகிகள் ஆலோசனைக் கூட்டத்தில் பங்கேற்ற அவர் செய்தியாளர்களிடம் கூறியதாவது:

தங்கள் கட்சியில் 100 சதவீத ஹிந்துக்கள் இருப்பதாக பாஜகவினர் கூறும் நிலையில், திமுகவில் 90 சதவீத ஹிந்துக்கள் இருப்பதாக முதல்வர் கூறுகிறார். இரண்டுக்கும் 10 சதவீதம்தான் வித்தியாசம்.

ஆகவே திமுகவும் பாஜகவும் வேறுவேறு அல்ல. தனது கட்சியின் மாநாட்டுக்கு விஜய் என்னை அழைக்க மாட்டார்; அழைக்கவும் கூடாது. நாம் தமிழர் எப்போதும் தனித்தே போட்டியிடும்.

வரும் சட்டப்பேரவைத் தேர்தலுக்கு 50 தொகுதிகளுக்கு வேட்பாளர்களைத் தேர்வு செய்துள்ளேன் என்றார் சீமான்.

பஜாஜ் ஹவுசிங் :பைனான்ஸ் லிமிடெட்

FINSERV BAJAJ

பெருநிறுவன அலுவலகம்: செரிப்ரம் IT பார்க் B2 கட்டம், 5ஆவது தளம், கல்யாணி நகர், புனே, மகாராஷ்டிரா-411014.
கிளை அலுவலகம்: பஜாஜ் ஹவுசிங் :பைனான்ஸ் லிட., தரைத்தளம், ஷுட்டெள D அம்பா, எண் 37, நெல்சன் மாணிக்கம் சாலை, சென்னை - 600029. அதிகாரப்பூர்வ அலுவலரின் விவரங்கள்: பெயர்: ரதீஷ் ராமச்சந்திரன், மின்னஞ்சல் முகவரி: Rathish.ramachandran@bajajfinserv.in, கைப்பேசி எண்: 8778385461 / 9940155459 / 8669189048.

அசையாச் சொத்துக்கள் விற்பனைக்கான E-ஏலப் பொது அறிவிப்பு கடனீட்டுச் சொத்துக்களை ரொக்கமாக்குதல் மற்றும் சீரமைத்தல் மற்றும் கடனீட்டுச் சொத்து மீதான உரிமை அமலாக்கச் சட்டம் 2002 ('சட்டம்') கீழ்

இதன் மூலம் பொதுமக்களுக்குப் பரவலாக அறிவிப்பது யாதெனில், கீழே குறிப்பிடப்பட்டுள்ள கடன்தாரர் / கூட்டுக் கடன்தாரர் ஆகியோர் கீழ்க்காணும் அசையாச் சொத்தை பஜாஜ் ஹவுசிங் ஃபைனான்ஸ் லிமிடெட் ('BHFL') நிறுவனத்திடம் அடமானம் வைத்துள்ளனர். இந்த அசையாச் சொத்து ('கடனீட்டுச் சொத்து / சொத்து') SARFAESI சட்டம் 2002 மற்றும் அதன் விதிகளுக்கு ஏற்ப அதிகாரப்பூர்வ அலுவலரால் சுவாதீனம் செய்யப்பட்டுள்ளது. இந்நிலையில் கீழே குறிப்பிட்டுள்ளபடி BHFL-க்கு வர வேண்டியுள்ள கடன் நிலுவைகள், உரிய வட்டி, கட்டணங்கள், செலவினங்கள் முதலானவற்றைத் திரும்பப் பெறும் பொருட்டு இந்தக் கடனீட்டுச் சொத்தானது ஏலக்கோரல் முறையில் பொது ஏலத்தின் மூலம் **27.09.2024** அன்று விற்பனை செய்யப்பட உள்ளது. கடனீட்டுச் சொத்தின் விற்பனையும் ஏலமும் **"உள்ளது உள்ள இடத்தில்", "உள்ளது உள்ளபடி", "உள்ள இடத்தில் உள்ள அனைத்தும்", "மாற்று வழங்கப்பட மாட்டாது"** எனும் முறைகளில் கடனீட்டுச் சொத்து (அமலாக்கம்) விதிகள், விதி எண்கள் 8 & 9 ஆகியவற்றின் கீழ் (இனி 'விதிகள்' எனக் குறிப்பிடப்படும்). இது பின்வரும் விதிமுறைகள் மற்றும் நிபந்தனைகளுக்கு இணங்க நடத்தப்படும்.

கடன் கணக்கு விவரங்கள் / கடன்தாரர்/கள் மற்றும் ஜாமீன்தாரர்/கள் பெயரும் முகவரியும்		
LAN: H403HLP0110950, H403LPT0114102 1. A P மணிகண்டன் (கடன்தாரர்), 2. M வெண்மதி (கூட்டுக் கடன்தாரர்), இருவரது முகவரி: 379/47, 3ஆவது தளம், கங்கா காவேரி மனை, 19ஆவது பிரதான சாலை, அண்ணாநகர், சென்னை, தமிழ்நாடு - 600040. 3. வேலம்மாள் எஸ்டேட்பிரைசஸ் (கூட்டுக் கடன்தாரர்) (உரிமையாளர் / அதிகாரப்பூர்வ கையெழுத்துதாரர் / நிர்வாக இயக்குநர் மூலமாக), எண் 15/80, 13ஆவது தெரு, திரு நகர், வில்லிவாக்கம், சென்னை-600049.	1. E-ஏல நாளும் நேரமும் 2. டேவணித் தொகை [EMD] செலுத்தக் கடைசி நாள் 3. சொத்து ஆய்வுக்கான நாளும் நேரமும்	1. குறைந்தபட்ச விலை 2. சொத்துக்கான டேவணித் தொகை [EMD] 3. ஏல உயர்வுத்தொகை
	1) E-ஏல நாளும் நேரமும்:- 27.09.2024 அன்று முற்பகல் 11:00 மணிக்கும் நண்பகல் 12:00 மணிக்கும் இடையில் எண்ணிக்கை வரம்பின்றி 5 நிமிடக் காலநீட்டிப்புடன். 2) வாடிக்கையாளர் விவர [KYC] ஆவணங்களுடன் டேவணித் தொகை [EMD] செலுத்தக் கடைசி நாள்:- 26.09.2024 அன்று மாலை 5:00 மணிக்குள் (இந்திய நேரப்படி). 3) சொத்து ஆய்வுக்கான நாள்: 28.08.2024 முதல் 25.09.2024 முடிய முற்பகல் 11:00 மணிக்கும் மாலை 4:00 மணிக்கும் இடையில் (இந்திய நேரப்படி)	1. குறைந்தபட்ச விலை:- ரூ.30,50,000/- (ரூபாய் முப்பது இலட்சத்து ஐம்பதாயிரம் மட்டும்), 2. டேவணித்தொகை [EMD]:- ரூ.3,05,000/- (ரூபாய் மூன்று இலட்சத்து ஐந்தாயிரம் மட்டும்), குறைந்தபட்ச விலையில் 10% 3. ஏல உயர்வுத்தொகை:- ரூ.25,000/- (ரூபாய் இருபத்தைந்தாயிரம் மட்டும்) மற்றும் அதன் மடங்குகளில்.

அசையாச் சொத்து விவரம்: இன்றியமையாப் பகுதிகள் அனைத்துடனும் கூடிய: மூன்றாவது தளத்தில